CASA-BYOD-AOF-for-Electronically-Source-Accounts TnC

மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் (வாடிக்கையாளர் நகல்)

நான் (இந்தச் சூழ்நிலைக்கு, "நான்", "என்" மற்றும் "எனது" ஆகியவை, கணக்குதாரர்கள் அனைவரையும் குறிக்கிறது) கீழ்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து புரிந்துகொண்டேன். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால், அவை www.axisbank.com என்ற இணையதளத்தில் மட்டுமே கிடைக்கும் என்பதையும் புரிந்து கொண்டேன்.

**எலக்ட்ரானிக் படிவத்தை நிரப்புதல்:** டேப்லெட்டுகள் மற்றும் மொபைலைப் பயன்படுத்தி ஆக்ஸிஸ் பேங்க்கில் கணக்குத் துவங்குவதை நான்/ நாங்கள் இதன்மூலம் உறுதிசெய்கிறேன்/ செய்கிறோம். மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்டின் பணியாளர்/பிரதிநிதி ஐடி ____________ ஐக் கொண்டுள்ள பணியாளர்/ பிரதிநிதி_________________ அவர்களை எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவத்தில் நான் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி என்/ எங்கள் சார்பாக கணக்குத் துவங்குதல் விவரங்களை உள்ளிடுவதற்கு அங்கீகரிக்கிறேன்/ அங்கீகரிக்கிறோம். எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவத்தில் அவர் உள்ளிட்ட விவரங்களை நான்/ நாங்கள் மதிப்பாய்வு செய்து, சரிபார்த்து, அது உண்மை, சரியானது மற்றும் தற்போதையது என்பதையும், எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவம் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பு எண், நான் விண்ணப்ப விவரங்களை மதிப்பாய்வு செய்து, சரிபார்த்து, உறுதிப்படுத்திய பிறகு உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்/ உறுதிப்படுத்துகிறோம். எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவமும், அச்சிடப்பட்ட உறுதிப்படுத்தல் படிவமும் மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவ எண்ணுக்கான கணக்குத் துவங்குதல் ஆவணங்களாக இருக்கும்.

**கணக்குத் துவங்குதல்/ சேவை விதி:** கணக்குத் துவங்குவது உள்ளிட்ட, அனைத்துச் சேவைகளும் நான் வழங்கிய விவரங்கள்/ஆவணங்களின் சரிபார்ப்புக்கு உட்பட்டவையாகும். ஏதேனும் காரணத்திற்காக இந்தக் கணக்கு துவங்கப்படாத பட்சத்தில், இந்தக் கணக்கில் நான்/நாங்கள் முதலில் செலுத்திய தொகை ரூ. 20,000-க்கும் அதிகமாக இருந்தால், அந்தத் தொகை எனக்கு டிடி/காசோலை அல்லது பிஓ வடிவத்தில் மட்டுமே திருப்பியளிக்கப்படும்.

**சேவைகள்:** சேவைகள் அனைத்தையும் சிறந்த முயற்சியின் அடிப்படையில் ஆக்ஸிஸ் பேங்க் வழங்கும். எனக்கு/ எங்களுக்கு கிடைக்கும் சேவைகளின் முழுமையான பட்டியல் www.axisbank.com இல் கிடைக்கும். ஏற்கனவே

வாடிக்கையாளராக இல்லை என்றால், வேறுவிதமாகக் கண்டறியப்பட்டால் எனக்கு எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், அது முடிவெடுக்கும் முறையில் வாடிக்கையாளர் ஐடிகளை ஒருங்கிணைப்பதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

**கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள்:** கட்டண அட்டவணையிலும், www.axisbank.com இணையதளத்திலும் விவரிக்கப்பட்டுள்ளவாறு, எனது கணக்கு மற்றும் நான் பயன்படுத்தும் பிற சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள் பொருந்தும். அவ்வப்போது பொருந்துகின்ற சரக்கு மற்றும் சேவை வரியும், பிற சட்டரீதியான வரிகளும் அனைத்து கட்டணங்கள் மீதும் விதிக்கப்படும்.

**வட்டி வழங்குதல்:** திட்டக் குறியீட்டிற்குப் பொருந்தக்கூடிய விகிதத்திற்கேற்ப, உங்கள் சேமிப்புக் கணக்கிற்குத் தினசரி இருப்பு அடிப்படையில் ஆக்ஸிஸ் பேங்க் வட்டி வழங்குகிறது.

**கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள், சேவைகள் மற்றும் வட்டி விகிதத்தில் மாற்றம்:** கட்டணங்கள், கட்டண விதிப்புகள், சேவைகளில் ஏதேனும் மாற்றம்/ நிறுத்தம் செய்யப்பட்டால் கடிதம்/எஸ்எம்எஸ்/இணையதளம்/மின்னஞ்சல் அல்லது பிற வழிகள் மூலம் குறைந்தது 30 நாட்களுக்கு முன்னதாக எனக்குத் தெரிவிக்கப்படும்.

**வசூலித்தல்:** கட்டணம்/ கட்டண விதிப்புகளைச் செலுத்துவதற்குக் கணக்கில் பணம் இல்லை என்றால், வசூல் வருமானம் அல்லது ஏதேனும் வைப்புத்தொகையிலிருந்து இந்தக் கணக்கிற்கு வரும் தொகைகள் உட்பட, கிடைக்கக்கூடிய எந்தவொரு வரவையும் பயன்படுத்துவதற்கு ஆக்ஸிஸ் பேங்க்கை நான் அங்கீகரிக்கிறேன்.

**டெபிட் வரம்பு:** வங்கி கணக்குத் துவங்கும் ஆவணங்களை ஆய்வு செய்து, அவை திருப்திகரமாக இருக்கும் வரையில் இந்தக் கணக்கின் டெபிட் வரம்பு ரூ.50000 இருக்கும் என்பதை நான் அறிவேன். ஆக்ஸிஸ் பேங்க்கின் பிரதிநிதி வழங்கும் கணக்குகளில், வங்கி ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே, கணக்கில் டெபிட் பரிவர்த்தனை செய்யும் வசதி செயல்படுத்தப்படும்.

**செயல்படாத கணக்கு:** 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு கணக்கில் நான் எந்தப் பரிவர்த்தனைகளும் செய்யாத பட்சத்தில் அது செயல்படாத கணக்காகக் கருதப்படும்.

**கணக்கு முடக்கம்:** வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டால் தவிர, பின்வரும் சூழ்நிலைகளில் எனக்கு முன் அறிவிப்புடன் எனது கணக்கை முடக்குவதற்கு நான் வங்கிக்கு அங்கீகாரம் வழங்குகிறேன் a. கணக்குத் துவங்குவதற்காக நான் சமர்ப்பித்த ஆவணங்கள் திருப்திகரமாக இல்லை b. கணக்கு வைத்திருக்கும் மைனர், வயது வந்தோருக்கான வயதை அடையும் போது c. எனது கணக்கில்

பரிவர்த்தனைகள் என்னால் தொடங்கப்படவில்லை என்று வங்கி சந்தேகிக்கும் போது (ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட பரிவர்த்தனைகளுக்கு வங்கி எந்தப் பொறுப்பையும் ஏற்காது). d. என் கணக்கு கறுப்புப் பணத்தை சலவை செய்யவோ அல்லது அங்கீகரிக்கப்படாத பணக் குவிப்புக்கான வழியாகவோ அல்லது ஏதேனும் சட்டவிரோதச் செயலுக்கான வழித்தடமாகவோ தவறாகப் பயன்படுத்தப்படுவதாக சந்தேகித்தால். (இந்தச் சூழ்நிலையில் எனக்கு அறிவிப்பு செய்யப்படாது). e. படிவம் 49A மற்றும்/அல்லது ஆதார் பதிவு எண்ணுடன் கணக்கு திறப்பதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், திறக்கப்பட்ட கணக்கின் வகையைப் பொறுத்து, தேவையான பான் மற்றும் ஆதார் எண்ணை குறிப்பிட்ட காலத்திற்குள் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**கணக்கை மூடுதல்:** பின்வரும் சந்தர்ப்பங்களில், எனக்கு முன் அறிவிப்புச் செய்து, எனது கணக்கை மூடுவதற்கு நான் வங்கியை அங்கீகரிக்கிறேன்: a. கணக்கில் உள்ள இருப்பு 3 மாதங்கள் அல்லது அதற்கு மேல் பூஜ்ஜியமாக இருக்கும் சூழ்நிலையில்; b. எனது கணக்கிலிருந்து அதிக அளவில் மறுக்கப்பட்ட பேமெண்ட்கள் ஏற்படும் சூழ்நிலைகளில்; c. பரிவர்த்தனைகளின் அளவு/வகையின் அடிப்படையில் கணக்கின் முறையற்ற நடத்தை. d. கணக்கின் திருப்தியற்ற நடத்தைக்காக.

**கணக்கு மாற்றம் (சம்பள சேமிப்புக் கணக்குதாரருக்குப் பொருந்தும்):** 3 மாத காலத்திற்கு எனது சம்பளக் கணக்கில் சம்பளம் வரவு வைக்கப்படவில்லை என்றால், எந்தவித அறிவிப்போ அல்லது முன்னறிவிப்போ இன்றி கணக்கு தானாகவே சாதாரண சேமிப்புக் கணக்காக மாற்றப்படும் (பொருந்தக்கூடிய அனைத்து கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகளுடன்) மற்றும் முழு கேஒய்சி பொருந்தும், தவறினால் கணக்கில் கடன் முடக்கம் செய்யப்படும்.

**பரிவர்த்தனைகள்:** நான் ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு வழங்குகின்ற இந்தக் கணக்கு தொடர்பான நிதிசார்/ நிதிசாராத ஏதேனும் அறிவுறுத்தல்கள் (எ.கா: காசோலை புத்தகம்/ கார்டு வழங்குதல், நிதிசார் பரிவர்த்தனைகள், தனிப்பட்ட விவரங்களைப் புதுப்பித்தல் போன்றவை) அந்த நேரத்தில் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில், வங்கியால் குறிப்பிடப்படும் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மூலம் மட்டுமே வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மூலம் பெறப்படாத அறிவுறுத்தல்களின்படி ஆக்ஸிஸ் பேங்க் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், அசாதாரண சூழ்நிலைகளில் அத்தகைய வசதிகளை வழங்குவதற்கு தனது சுயாதீன விருப்பத்திற்கேற்ப செயல்படும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**சேனல் வசதிகள்:** டெபிட் கார்டுகள், ஏடிஎம் கார்டுகள், ஏடிஎம்கள், இன்டர்நெட் பேங்கிங் போன்ற ஆக்ஸிஸ் பேங்க் அளிக்கும் அனைத்து சேனல் வசதிகளும் www.axisbank.com இல் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட வழிகாட்டுதல்களுக்கும்,

எனக்கு வழங்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும். எனது/எங்கள் கணக்கின் எந்தவொரு முக்கியத் தகவலையும், குறிப்பாக இன்டர்நெட்/ மின்னஞ்சல்/ தொலைபேசி ஊடகம் மூலம் நான்/நாங்கள் வெளிப்படுத்த மாட்டோம் என நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் மற்றும் உறுதியளிக்கிறோம். அத்தகைய வெளிப்படுத்தல்களால் ஏற்படும் மோசடிகளுக்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பாகாது. எனது கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள காசோலை(கள்), கிரெடிட்/டெபிட் கார்டு(கள்) தொலைந்தால் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்கவும் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம்.

**டெபிட் கார்டு:** டெபிட் கார்டின் பயன்பாடு செலவாணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்படி இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில், அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டம் 1999 மற்றும் அதில் ரிசர்வ் வங்கியால் செய்யப்பட்ட திருத்தங்களின் கீழ் நடவடிக்கைக்குக் கார்டுதாரர் பொறுப்பாவார்.

**ஆக்ஸிஸ் பேங்க் இன்டர்நெட் பேங்கிங்கிற்கான பொறுப்புத் துறப்பு:** ஆக்ஸிஸ் பேங்க் இன்டர்நெட் பேங்கிங் வசதியை வழங்குதல், பயன்பாடு ஆகியவை www.axisbank.com இல் அமைக்கப்பட்டவாறு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் நிர்வகிக்கப்படுகிறது என்பதை நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம் மாறும் அவற்றுக்கு இணங்கிச் செயல்பட ஒப்புக் கொள்கிறேன்/ ஒப்புக் கொள்கிறோம். ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் மின்னஞ்சல்கள் உட்பட, எந்த வடிவத்திலும் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து உள்நுழைவு ஐடி/கடவுச்சொல் தொடர்பான எந்த தகவலையும் கேட்காது என்பதை நான்/நாங்கள் அறிவேன்/அறிவோம். மேலும், எனது/எங்கள் உள்நுழைவு ஐடி, கடவுச்சொல், கார்டுகள், கார்டு எண்கள் அல்லது பின் (தனிப்பட்ட அடையாள எண்) போன்றவற்றை யாரிடமாவது நான்/நாங்கள் பகிர்வதால்/வெளிப்படுத்துவதால் ஏற்படும் இழப்புகளுக்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது என்பதையும்,எந்தவொரு அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிற்கும் வங்கியில் உரிமைகோரல்களைச் செய்ய மாட்டேன்/மாட்டோம் என்றும் நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ ஒப்புக்கொள்கிறோம் மற்றும் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கு, என் /எங்கள் கணக்கு விவரங்களைப் பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் நான்/ நாங்கள் மேற்கொள்வோம்.

**தனிப்பட்ட விவரங்கள்:** a. எனது தனிப்பட்ட விவரம், முகவரி மாற்றம் உள்ளிட்ட எனது விவரங்களில் ஏதேனும் மாற்றம் செய்தால், 2 வாரங்களுக்குள் சான்று ஆவணங்களுடன் அவற்றை நான் வங்கிக்கு வழங்குவேன். நான் தவறான விவரங்களை வழங்கி அல்லது விவரங்களைப் புதுப்பிக்காமல் இருந்து,

அவற்றைச் சரி என்றும், உண்மை என்றும் கருதி வங்கி செயல்படுவதால் எனக்கு ஏற்படக் கூடிய ஏதேனும் மோசடி, இழப்பு அல்லது சேதத்திற்குப் பொறுப்பேற்பதில் இருந்து ஆக்ஸிஸ் பேங்க்கை விடுவிக்க நான் சம்மதிக்கிறேன். b. நான் வழங்கிய எந்த விதமான விவரங்களும் (தனிப்பட்ட மற்றும் முக்கியமான விவரங்கள் உட்பட) சேவைகள் அல்லது வசதிகளை வழங்குதல், பரிவர்த்தனைகளை எளிதாக்குதல், விவரங்கள் மற்றும் புதுப்பிப்புகளை வழங்குதல் (மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள் உட்பட), ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு, கடன் மதிப்பெண், சரிபார்ப்பு, சட்டம்/வங்கியின் வழக்கப்படி தேவைப்படும் தொலைத்தொடர்பு அல்லது எலக்ட்ரானிக் தீர்வு நெட்வொர்க்கில் பங்கேற்பது ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும். c. நான் வழங்கிய அனைத்து விதமான விவரங்களையும் (தனிப்பட்ட மற்றும் முக்கியத் தகவல் உட்பட) வணிக நோக்கத்திற்காகவும், தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படையிலும் ஆக்ஸிஸ் பேங்க்குடன் ஒப்பந்தம் செய்துள்ள முகமைகள்/சேவை வழங்குநர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். வங்கியின் தனியுரிமைக் கொள்கைக்கேற்ப அந்தச் சூழலில் அவ்வப்போது பொருந்தும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு எப்போதும் இணங்கிச் செயல்பட ஆக்ஸிஸ் பேங்க் முயற்சிக்கும். விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான எனது ஒப்புதலை நான் திரும்பப் பெற விரும்பினால், முன்பு வழங்கப்பட்ட ஒப்புதலின்படி எனக்குக் கிடைக்கும் தயாரிப்புகள்/சேவைகள் அதன் பின்னர் எனக்குக் கிடைக்காது, அந்தத் தயாரிப்புகள்/சேவைகளை மூடுகின்ற செயல்முறையை நான் துவங்க வேண்டியிருக்கும். d. சட்டம், விதிமுறை அல்லது ஒழுங்குமுறைகள் கோரும் போது அல்லது அனுமதிக்கும் போது அல்லது ஏதேனும் அரசு அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் கோரிக்கையின் பேரில் அல்லது மோசடிகளைத் தடுக்கும் நோக்கத்திற்காக அல்லது பொது நலன் கருதி, கணக்குதாரரின்/கணக்குதாரர்களின் தனிப்பட்ட ஒப்புதல் இல்லாமல் வாடிக்கையாளரின் கணக்கு பற்றிய விவரங்களை வங்கி வெளியிடலாம். கூட்டு கணக்குதாரர்களின் மொபைல் எண்கள் வழங்கப்பட்டுள்ள இடங்களில், அவர்கள் ஏடிஎம், இன்டர்நெட் பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் (பொருந்துவதற்கேற்ப) மூலம் தொடங்கும் பரிவர்த்தனைகளுக்கு அந்த எண்களில் ஒரு முறை கடவுச்சொல் (OTP) மற்றும் பரிவர்த்தனை விழிப்பூட்டல்களை அவர்கள் பெறுவார்கள். ஆதார்: ஆக்ஸிஸ் பேங்க்கின் வங்கிச் சேவைகளைப் பெறும் நோக்கங்களுக்காக, ஆதார் அடிப்படையிலான அங்கீகார அமைப்பில் என்னை அங்கீகரிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதையும், ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்திற்காக எனது ஆதார் எண், பயோமெட்ரிக் மற்றும்/அல்லது ஒரு முறை பின் (ஓடிபி) தரவை (மற்றும்/அல்லது ஏதேனும் ஒத்த அங்கீகார பொறிமுறையை) வழங்க ஒப்புதல் அளிக்கிறேன் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். பயோமெட்ரிக்ஸ் மற்றும்/அல்லது ஓடிபி மற்றும்/அல்லது அங்கீகாரத்திற்காக நான் வழங்கக்கூடிய

வேறு ஏதேனும் அங்கீகார பொறிமுறையானது, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்லாமல், யுஐடிஏஐயிடம் இ-கேஒய்சியைப் பெறுவதற்கு ஆதார் அங்கீகார அமைப்பின் மூலம் எனது அடையாளத்தை அங்கீகரிக்க மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆதார் அடிப்படையிலான அங்கீகார நோக்கத்திற்காக வழங்கப்பட்ட எனது தனிப்பட்ட அடையாள விவரங்களின் பாதுகாப்பையும் இரகசியத்தன்மையையும் ஆக்ஸிஸ் பேங்க் உறுதி செய்யும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தைப் பயன்படுத்தி நான் தகுதிபெறும் திட்டங்கள் அனைத்திலும் அரசு பணம் வழங்குதல்களைப் பெறுவதற்கு எனது இணைக்கப்பட்ட ஆதார் இயக்கப்பட்ட வங்கிக் கணக்கைப் பயன்படுத்தவும் இதன் மூலம் நான் வங்கியை அங்கீகரிக்கிறேன். சட்டப்பூர்வ வணிக நோக்கங்களுக்காக எனது விண்ணப்பத்தைச் செயலாக்கும் போது எனது ஆதார் எண்ணைச் சரிபார்த்து அங்கீகரிக்க ஆக்ஸிஸ் வங்கியை நான் அங்கீகரிக்கிறேன். மேலும், தேவைப்படும் போது எனது ஆதார் தொடர்பான விவரங்கள்/தகவல்களை ஒழுங்குமுறை/சட்டப்பூர்வ அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ள வங்கியை நான் அங்கீகரிக்கிறேன். மேற்கூறிய உறுதிமொழியின் மூலம் செய்யப்பட்ட அல்லது செய்யத் தவறிய எந்தவொரு செயலுக்காகவும் ஏற்பட்ட அனைத்துச் செலவுகள், கட்டணங்கள், சேதங்கள், அபராதங்கள் ஆகியவற்றிலிருந்து மற்றும்/அல்லது அதற்கு எதிராக எல்லா நேரங்களிலும் வங்கிக்கு இருக்கும் பொறுப்பிற்கு விலக்கு அளிக்க மற்றும் தொடர்ந்து விலக்கில் வைத்திருக்க நான் ஒப்புக் கொள்கிறேன்.

**இன்ஸ்டா கணக்கு உறுதிமொழி:** "வெல்கம் கிட்டில் டெபிட் கார்டு மற்றும் காசோலை புத்தகத்தைப் பெற்றுள்ளேன் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். சேமிப்பு/நடப்புக் கணக்கைத் துவங்குவதற்கு நான் ஆக்ஸிஸ் பேங்க்கை அணுகியுள்ளேன். கணக்கு செயல்படுத்தப்பட்ட பிறகு என்னால் மட்டுமே அந்தக் கணக்கு இயக்கப்படும், இது தொடர்பாக எனக்கு அறிவிப்பு கிடைக்கும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். மேலும், இதை எந்த விதத்திலும் மீறுவது எனது தரப்பில் கொடாநிலையாக அமையும் என்றும், அத்தகைய கொடாநிலை ஏற்படும் போது, அந்தக் கணக்கை எந்தக் காரணமும் தெரிவிக்காமல் உடனடியாக மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது என்றும் நான் உறுதியளிக்கிறேன். வெல்கம் கிட்டின் டெலிவரி மற்றும்/அல்லது பெறுவது என்பது, ஆக்ஸிஸ் பேங்க் கணக்குத் துவங்கியுள்ளது அல்லது துவங்க ஒப்புக்கொண்டது என்று அர்த்தமல்ல என்பதை நான் அறிவேன். ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் தனது சுயாதீன விருப்பத்தின் பேரில், எந்தவொரு காரணத்திற்காகவும் கூடுதல் ஆவணங்களைக் கோரலாம் அல்லது விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். நிராகரிக்கப்படும் பட்சத்தில், வெல்கம் கிட் மற்றும் கடிதம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும் என்பதை நான் அறிவேன், மேலும் உடனே அதை வங்கியிடம் திருப்பி ஒப்படைப்பேன் என உறுதியளிக்கிறேன். எனது கணக்கை

செயல்படுத்திய பின்னர் மட்டுமே நான் காசோலைகளை வழங்குவேன் என்றும், எனது கணக்கை செயல்படுத்துவதற்கு முன் ஏதேனும் காசோலையை வழங்கும் பட்சத்தில், வங்கிக்கு ஏற்படும் எந்தச் செலவு, பின் விளைவுகள், செலவினங்களிலிருந்து வங்கிக்குப் பாதிப்பு ஏற்படாமல் வைத்துக் கொள்வேன் என்றும் உறுதியளிக்கிறேன். உங்கள் கணக்கில் பணத்தை ரொக்கமாக டெபாசிட் செய்ய விரும்பினால், கிளைக்குச் செல்லவும். விற்பனைப் பணியாளர்களிடமோ அல்லது வேறு எந்த வங்கிப் பிரதிநிதியிடமோ பணத்தை ஒப்படைக்க வேண்டாம். வழங்கப்பட்ட தகவல்கள் தற்போதைய தேதியில் சரியானவை என்று நான் இதன் மூலம் உறுதியளிக்கிறேன், மேலும் எனது சமீபத்திய புகைப்படம் மற்றும் கேஒய்சி ஆவணங்களின் புகைப்படங்களையும் இதன்மூலம் சமர்ப்பிக்கிறேன். வங்கியின் தயாரிப்புகளும், சேவைகளும் பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டு வழங்கப்படும் என்பதை நான் அறிவேன். விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் நாமினி படிவத்திற்கான ஒப்புதல் ஆகியவற்றின் நகல் ஒன்றை நான் பெற்றுள்ளேன்.

**வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு -** a. நான்/ நாங்கள் பணம் செலுத்தல் அங்கீகார விவரங்களை பகிர்ந்து கொள்வது போன்ற, என்/எங்கள் அலட்சியத்தின் காரணமாக இழப்பு ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில், வங்கிக்கு அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை குறித்து நான்/ நாங்கள் தெரிவிக்கும் வரை, அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளின் காரணமாக ஏற்படும் மொத்த இழப்பிற்கும் நான்/நாங்கள் பொறுப்பாவென்/ பொறுப்பாவோம். b. வங்கிக்கோ அல்லது எனக்கோ/எங்களுக்கோ அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கிப் பரிவர்த்தனைக்கான பொறுப்பு இல்லாமல் கணினியில் வேறு இடங்களில் இருக்கும் சந்தர்ப்பங்களில் மற்றும் அந்தப் பரிவர்த்தனை குறித்து வாடிக்கையாளர் தரப்பில் வங்கிக்குத் தெரிவிப்பதில் தாமதம் ஏற்படும் போது (வங்கியில் இருந்து தகவல் பெற்ற நான்கு முதல் ஏழு வேலை நாட்களில்) எனக்கு/எங்களுக்கு பரிவர்த்தனை ஒன்றுக்கான பொறுப்பு என்பது, அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பு அல்லது தகுந்த வழிகாட்டுதலின் கீழ் வாடிக்கையாளரின் அதிகபட்ச வரையறுக்கப்பட்ட பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, இதில் எது குறைவாக உள்ளதோ அதுவாக வரையறுக்கப்பட்டிருக்கும்.

**ஒன் அசிஸ்ட் உறுதிமொழி:** ஒன் அசிஸ்ட் திட்டத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள நான் ஆர்வமாக உள்ளேன். அதற்காக ஒன் அசிஸிட் தொடர்பாக என்னைத் தொடர்பு கொள்வதற்கு ஆக்ஸிஸ் பேங்க் மற்றும்/அல்லது அதன் பிரதிநிதி அல்லது அவர்களின் முகவர்கள் அல்லது ஒன் அசிஸ்ட் கன்ஸ்யூமர் சொல்யூஷன்ஸ் பிரைவேட். லிமிடெட் அல்லது மூன்றாம் தரப்பினருக்கு இதன் மூலம் நான் ஒப்புதல் அளிக்கிறேன். ஒன் அசிஸ்ட் என்பது, ஒன் அசிஸ்ட்

கன்ஸ்யூமர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும் சலுகை என்பதையும், தேவைப்படும் விதத்தில் அல்லது ஆக்ஸிஸ் பேங்க் பொருத்தமானது எனக் கருதும் விதத்தில் இந்தப் படிவத்தில் உள்ள விவரங்கள் ஒன் அசிஸ்ட் கன்ஸ்யூமர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுடன் மற்றும்/ அல்லது ஒன் அசிஸ்ட் கன்ஸ்யூமர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுடன் ஆக்ஸிஸ் பேங்க் ஏற்பாடு செய்யும் வேறு ஏதேனும் மூன்றாம் தரப்பினருடன் பகிரப்படும் என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன். இந்த ஒப்புதல், ஒன் அசிஸ்டில் உள்ள விவரங்கள் தொடர்பாக என்னைத் தொடர்புகொள்வதற்காக, நான் செய்திருக்கக் கூடிய எந்த டிஎன்சி பதிவுக்கும் குறிப்பிட்ட தள்ளுபடியாகக் கருதப்படும். Y______N_____ *இது வாடிக்கையாளர் தகவல்தொடர்புகளைப் பெறுவதற்கு 90 நாட்களுக்கு DNC தள்ளுபடியை மீறி இது அமலில் இருக்கும்.

**ஃபாட்கா-சிஆர்எஸ் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:** 7 ஆகஸ்ட் 2015 அன்று, மத்திய நேரடி வரிகள் வாரியம் வருமான வரி விதிகள், 1962 இன் ஒரு பகுதியாக 114F முதல் 114H வரை அறிவித்துள்ளது. இந்த விதிமுறைகளுக்கு, எங்கள் கணக்குதாரர்கள் அனைவரும் இருந்தும் வங்கி போன்ற இந்திய நிதி நிறுவனங்கள் கூடுதல் தனிப்பட்ட, வரி மற்றும் நன்மை பெறும் உரிமையாளரின் விவரங்கள் மற்றும் சில சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை வழங்க வேண்டும். தொடர்புடைய சந்தர்ப்பங்களில், கணக்கிலிருந்து அல்லது அது தொடர்பான ஏதேனும் வருமானத்தில் இருந்து சரியான நிறுத்திவைத்தலை உறுதிப்படுத்துவதற்காக வரி அதிகாரிகள்/ நியமிக்கப்பட்ட முகமைகள்/நிறுத்திவைப்பு முகவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். நீங்கள் வழங்கிய தகவலில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டால், உடனடியாக, அதாவது 30 நாட்களுக்குள் எங்களுக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுத்தவும். உங்கள் வரிக்கான குடியுரிமையைப் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் வரி ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும். நீங்கள் ஒரு அமெரிக்கக் குடிமகனாகவோ அல்லது குடியுரிமை பெற்றவராகவோ அல்லது கிரீன் கார்டு வைத்திருப்பவராகவோ இருந்தால், அயலகத் தகவல் புலத்தில் உங்களின் அமெரிக்க வரி அடையாள எண்ணுடன் அமெரிக்காவைச் சேர்க்கவும். உங்கள் வரி வசிப்பிடமாக இருக்கும் நாடு அத்தகைய அடையாளங்காட்டிகளை வழங்கினால், TIN அல்லது அதற்குச் சமமானதை வழங்க வேண்டியது கட்டாயமாகும். TIN எதுவும் இன்னும் பெறவில்லை அல்லது இன்னும் வழங்கப்படவில்லை என்றால், அதற்குரிய விளக்கத்தை அளித்து, இந்தப் படிவத்துடன் இணைக்கவும். சிகேஒய்சி. உறுதிமொழி எனது தனிப்பட்ட/ கேஒய்சி விவரங்கள் மத்திய சிகேஒய்சி பதிவகத்துடன் பகிரப்படலாம். மேற்காணும் பதிவு செய்யப்பட்ட எண்/மின்னஞ்சல் முகவரியில் எஸ்எம்எஸ்/மின்னஞ்சல் மூலம் மத்திய கேஒய்சி பதிவகத்தில் இருந்து தகவலைப் பெறுவதற்கு இதன்மூலம் நான் ஒப்புக்கொள்கிறேன்.

எனது ஒற்றை வாடிக்கையாளர் ஐடியைத் தக்கவைத்துக்கொள்ளவும், ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களுக்கேற்ப செயலில் உள்ள என் அனைத்துத் தொடர்பு நிலைகளையும் தக்கவைக்கப்பட்ட வாடிக்கையாளர் ஐடியுடன் இணைக்கவும், என்னிடம் உள்ள மற்ற வாடிக்கையாளர் ஐடிகளை இடைநிறுத்தவும் இதன் மூலம் வங்கிக்கு நான்/நாங்கள் அங்கீகாரம் வழங்குகிறோம். ஏஓஎஃப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எனது சமீபத்திய மக்கள்தொகை விவரங்களை, அதாவது மொபைல் எண், மின்னஞ்சல் ஐடி, முகவரி மற்றும் அனைத்து வங்கித் தொடர்புகளுக்கும் தற்போதுள்ள சிஐஎஃப் ஐடியில் உள்ள புதிய கையொப்பம் ஆகியவற்றைப். புதுப்பிக்க இதன் மூலம் நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஃபிளிப்கார்ட் கிரெடிட் கார்டுடன் கூடிய லிபர்டி சேமிப்புக் கணக்கிற்கு விண்ணப்பித்துள்ள வாடிக்கையாளர்கள், அந்த லிபர்டி சேமிப்புக் கணக்கை ஃபிளிப்கார்ட் கிரெடிட் கார்டு கணக்கு துவங்கிய 20 நாட்களுக்கு முன்பாகவோ அல்லது பின்னரோ துவங்கினால், ஃபிளிப்கார்ட் கிரெடிட் கார்டு மீதான சேர்தல் கட்டணத் தள்ளுபடியைப் பெறத் தகுதி பெறுவார்கள். கிரெடிட் கார்டு கணக்குத் துவங்கிய தேதியிலிருந்து 45 நாட்களில் ஃபிளிப்கார்ட் கிரெடிட் கார்டில் சேர்தல் கட்டணத் தள்ளுபடி செயல்படுத்தப்படும், அது செயல்பாட்டில் உள்ள லிபர்டி சேமிப்புக் கணக்கில் உள்ள தகுதியுள்ள அனைத்து கார்டுகளுக்கும் அடுத்து வரும் கிரெடிட் கார்டு அறிக்கையில் பிரதிபலிக்கும். மேற்கண்டவை வங்கியின் சுயாதீன விருப்பத்திற்கேற்ப மாற்றங்களுக்கு உட்பட்டவை என்பதை வாடிக்கையாளர் புரிந்துகொள்கிறார். எதிர்காலத்தில் நான்/நாங்கள் வழங்கிய விவரங்கள் அல்லது ஆவணங்களில் ஏதேனும் புதுப்பிப்பு/மாற்றம் செய்யப்படும் பட்சத்தில், அது உடனடியாக, அதாவது மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குத் தெரிவிக்கப்படுவதை நான்/நாங்கள் உறுதிப்படுத்துவோம். மேலும், வேறு ஏதேனும் வங்கிகள்/நிதி நிறுவனம்/மற்ற பொருத்தமான அதிகார அமைப்புகளால் எழுப்பப்படும் ஏதேனும் குறிப்பிட்ட தேவையின் நோக்கங்களுக்காக எனது/எங்கள் மக்கள்தொகை/தொடர்பு விவரங்கள் தொடர்பான விவரங்களை அவற்றுடன் பகிர்ந்துகொள்வதற்கு அல்லது வெளியிடுவதற்கு வங்கிக்கு இதன்மூலம் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது என்பதையும் நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். கணக்குத் துவங்கும் போது, கணக்குத் துவங்கும் படிவத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு, சம்பளக் கணக்குடன் திருப்பிச் செலுத்தும் கணக்கை (SBERA) திறப்பதற்கு இதன் மூலம் ஆக்ஸிஸ் பேங்க்கை நான் அங்கீகரிக்கிறேன்.